<u>கீழக்கரை நகர்மன்ற 29.05.2019–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்</u>

**<u>பொருள் :1</u>**

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 2288/பி3/2019, நாள். 25.02.2019 மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.FMSW-01/RS/DEE/ TNPCB/RMD2019 நாள்.01.04.2019 மற்றும் எண்.068/2019/JCEE (M) TNPCB/ MDU/F058 SWM/2019 நாள். 12.04.2019–ம் தேதிய வழிகட்டுதல்படி மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெற்று திடக்கழிவு மேலாண்மை விரிவான செயல்திட்ட அறிக்கையினை அரசிதழில் வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 20.01.2019, 29.01.2019, 07.02.2019, 20.02.2019, 28.02.2019, 09.03.2019 மற்றும் 15.03.2019 ஆகிய தேதிகளில் பல்வேறு ஒப்புதல் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்படி குறைகள் நிவர்த்தி செய்து விரிவான அறிக்கை மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பவும், இந்தப் பணிகள் மேற்கொள்ள ஆட்டோ கேட் நிறுவனத்திற்கு உரிய செலவு தொகை பட்டியல்படி வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை உடனடியாக செயல்படுத்திட தேசிய பசுமை தீர்ப்பாயம் மூலம் உத்திரவு வழங்கப்பட்டுள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் தமிழ்நாட்டு மாசுக்கட்டுப்பாடு வாரியம் அவர்களின் வழிகாட்டுதல்படி விரிவான திட்ட அறிக்கை பணிகள் தயார் செய்யவும் அவசர அவசியம் கருதி அதற்கான பணிகள் Auto Cadd Centre மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவுத் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.569 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :2</u>**

**இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 தட்டாந்தோப்பு தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் மூலம், அப்பகுதி பொதுமக்களால் தினமும் வெளியேற்றப்படும் வீட்டு கழிவு நீர் பம்பிங் செய்யப்பட்டு வெளியேற்றப்படுகிறது. இந்த கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் அமைந்துள்ள 10HP குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்ப் இயங்காததால் கழிவு நீர் வாறுகாலில் இருந்து வெளியேறும் நிலை உள்ளதால் மின்மோட்டார்**

பம்ப் (10HP Motor Pump) பழுது நீக்கம் செய்து கொடுக்குமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்படி 10HP குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் இயங்காததால் கழிவுநீர் சாலையில் வெளியேறி பொதுசுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன், பொதுமக்கள் வாகன ஓட்டிகள், பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகி, பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. ஆகவே, 10HP குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்ப் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.45,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். **461/2019/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. பொதுசுகாதார நலன் கருதி 10HP குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்ப் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவினம் ரூ.45,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## <u>தீர்மானம் எண்.570 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :3</u>

கீழக்கரை நகராட்சியின் 2017—2018—ம் ஆண்டு வருவாய் மற்றும் மூல நிதி கணக்குகள் மற்றும் குடிநீர் வடிகால் நிதி மற்றும் இதரக் கணக்குகளுக்கான தணிக்கை அறிக்கை இராமநாதபுரம் உள்ளாட்சி நிதித்தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.780/அ1/2018 நாள் 27.02.2019—ன் படியானது 27.03.2019—ந் தேதி பெறப்பட்டது. மேற்கண்ட தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கவும் மேலும் தணிக்கை அறிக்கை பத்தி எண் 38—ல் குறிப்பிட்டுள்ள தணிக்கை கட்டணம் ரூ.44,482/— மட்டும் அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>(கோப்பு எண்.271/2018/இ1)</u>

<u>அலுவலக குறிப்பு</u>

1. **2017–2018–ம் ஆண்டு தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தணிக்கை கட்டணம் ரூ.44,482/–மட்டும் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.**

**<u>தீர்மானம் எண்.571அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :4</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 முடிய உள்ள பகுதிகளில் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் மாநில அரசிதழ் வெளியீடு So.No.5/2019 / TNSEC / PE-1-ன் படியும் ந.க.எண் 4311/2018/தே.பொ1 நாள் 03.05.2019–ன் படியும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண் தே1/6467/2019 நாள் 06.05.2019–ன் படியும் உள்ளாட்சி தேர்தல் நடத்த வாக்குச்சாவடி பட்டியல், வாக்காளர் பட்டியல் தயார் செய்யவும் இதர பணியினை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தேர்தல் செலவீனங்கள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ 3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி பெற வேண்டப்படுகிறது.

**(ந.க.எண் 207/2017/எச்1)**

**அலுவலக குறிப்பு**

உள்ளாட்சி தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.572அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :5</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் துப்புரவு பணிகளின் போது பயன்படுத்தப்படும் கிருமி நாசினி பொருட்களான **சுண்ணாம்புத்தூள், பிளிச்சிஙபவுடர், ஈமருந்து (நூவான்) மற்றும் பினாயில்** போன்ற பொருட்கள் **2019–20 ஆம்** ஆண்டிற்கு வாங்கி வழஙகிடும் பொருட்டு இவ்வலுவலக துப்புரவுபணி மேற்பார்வையாளர்களால் தேவைப்பட்டியல் வழஙகப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகர் மக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்கண்ட பொதுசுகாதார கிருமி நாசினி பொருட்கள் துப்புரவு பணியின் அவசியம் கருதி வாஙகுவதற்கு துப்புரவு ஆய்வாளர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 5,25,000/–யை

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு துப்புரவு ஆய்வாளரால் கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண் எச்1/315/2019)**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | – | 10 | டன் |
| 2. | பிளிச்சிங பவுடர் | – | 5 | டன் |
| 3. | பினாயில் | – | 500 | லிட்டர் |
| 4. | ஈ மருந்து நூவான் | – | 50 | லிட்டர் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. உத்தேச செலவீனம் ரூ 5,25,000/– ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுசுகாதார நலன் கருதி கிரிமிநாசினி பொருட்கள் அரசு கூட்டுறவு நிறுவனஙகளில் வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.573 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :6</u>**

பொதுசுகாதாரம் – கீழக்கரை நகராட்சி பொதுசுகாதாரத்திற்கு பயன்படுத்தப்படும் காம்பாக்டர் வாகனம் TN65 AE 7663 –ல் கியர்பாக்ஸ் பழுது சரிசெய்தல், PTO பம்ப் புதிதாக மாற்றுதல் , கம்ப்ரஸர் பிளேடு செட் புதிதாக மாற்றுதல், கியர்பாக்ஸ் மற்றும் கம்ப்ரஸர் ஆயில் மாற்றுதல், மற்றும் புதிதாக 4 எண்ணம் டயர்கள் மாற்றி பழுதுகளை சரிசெய்து தருமாறு ஓட்டுநரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார காம்பாக்டர் வாகனத்தை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பழுது நிக்கம் செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ1,50,000/– ஆகும் என இவ்வலுவலக துப்புரவு அலுவலரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. பொதுசுகாதார நலன் கருதி காம்பாக்டர் வாகனம் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>( ந.க.எண். 469 /எச்1 / 2019 )</u>

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. உத்தேச செலவீனம் ரூ1,50,000/–க்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொதுசுகாதாரப் பணி அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.574 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :7</u>**

இந்நகராட்சிப் பகுதிகளில் தினமும் சேகரமாகும் 18 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பை கழிவுகளை பொது சுகாதார பிரிவின் மூலம் நகராட்சி உரக்கிடஙகில் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2016–17 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் இந்நகராட்சி உரக்கிடஙகில் குப்பைகளை பிரித்தெடுத்து உரமாக்க கட்டமைப்புகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. உரக்கிடஙகில் குப்பைகளை உரமாக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டு பயன்படுத்த வேண்டிய நிலையில் நகராட்சி உரக்கிடஙகில் மின்சார வசதிகள் ஏதும் இல்லை. மேற்காணும் திட்டத்தினை உடனடியாக செயல்படுத்தும் பொருட்டு இந்நகராட்சி உரக்கிடஙகில் புதிதாக மின்கம்பம் மற்றும் மின்கம்பிகள் பொருத்தி மும்முனை இணைப்பு (3 Phase) வழஙகுவதற்கு உரிய அனுமதி மற்றும் மதிப்பீட்டுக் கட்டணஙகள் தெரிவிக்கும் பொருட்டு உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் இராமநாதபுரம் அவர்களுக்கு உரிய விண்ணப்பம் 09.07.2018–ம் தேதி செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இராமநாதபுரம், தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் அவர்களால் ஆய்வு மேற்கொண்டு நகராட்சி உரக்கிடஙகில் மும்முனை இணைப்பு (3 Phase) வழஙகுவதற்கு முதலில் டிரான்ஸ்பார்மர் அமைக்க வேண்டி உள்ளது. ஆகவே புதிதாக விண்ணப்பம் செய்து மும்முனை (3 Phase) மின் இணைப்பு மின்சாதன பொருட்கள் பொருத்துவதற்கு அந்த இடத்தில் சிறிய அறை அமைக்கவும் அதன்பின்பு இராமநாதபுரம், தமிழ்நாடு மின்சார வாரிய கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் ஆய்வு மேற்கொண்டு மின் இணைப்பு வழஙக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததின் அடிப்படையில் 21.05.2019ம் தேதி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள பழுதான காவலர் அறையை மராமத்து பணிகள் செய்து அந்த கட்டிடத்தில் மும்முனை (3 Phase) மின் இணைப்பு மின்சாதன பொருட்கள் பொருத்துவதற்கு ஏதுவாக பழுதுநீக்கம் செய்து பயன்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 45,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**<u>(கோப்பு எண். 837 / 2018/ இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி உரக்கிடஙகில் மும்முனை மின் இணைப்பு (3 Phase) பெறுவதற்குரிய கட்டிடம் மராமத்து பணிகள் பார்ப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2. உத்தேச செலவினம் ரூ. 45,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.575 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :8</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பெத்திரி தெருவில் (21 குச்சில்) அமைந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்பாட்டில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் தண்ணீர் பயன்பாட்டிற்குரிய கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 0.5HP மின்மோட்டார்கள் கிணற்று தண்ணீரில் அதிக உப்பு தன்மையின் காரணமாக மின்மோட்டார்கள் அதன் உதிரி பாகங்கள் துருபிடித்து மின்மோட்டார்களை இயக்க முடியாமல் மோசமான நிலையில் உள்ளதால், மேற்கண்ட இரண்டு சமுதாய கழிப்பிடங்களில் உள்ள மின்மோட்டார்களை மாற்றி புதிதாக இரண்டு எண்ணம் 0.5HP மின்மோட்டார்கள் பொருத்தி கொடுக்கும் பணிகள் செய்வதற்கு இவ்வலுவலக மின்பணியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட இரண்டு சமுதாய கழிப்பிடங்களிலும் 2 எண்ணம் 0.5HP மின்மோட்டார்கள் புதிதாக பொருத்தும் பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,000/—ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.290/2019/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. பொதுசுகாதார நலன் கருதி சமுதாய கழிப்பிடங்களில் தண்ணீர் பயன்பாட்டிற்கு 0.5HP மின்மோட்டார்கள் 2 எண்ணம் பொருத்துவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவினம் ரூ.25,000/—ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.576 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :9</u>**

**தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண்.84, நாள்.25.06.2018ன்படி ஒருமுறை உபயோகப்படுத்தப்பட்டு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கப்படுவதும், சேமித்து வைப்பதும், விநியோகிப்பதும், போக்குவரத்து செய்வதும், விற்பதும் 01.01.2019 முதல் தடை செய்யப்பட்டுள்ள அறிவிக்கை இந்நகராட்சி மூலம் தினகரன் KAL Publication (P) Ltd தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.12,999/—க்கு பட்டியல் எண்.3300143579 நாள்.08.03.2019—ன் படியானது இந்நகராட்சிக்கு 15.03.2019—ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.12,999/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

தினகரன் KAL Publication (P) Ltd நாளிதழில் விளம்பர கட்டணம் ரூ.12,999/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.577 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் :10

தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை (Swatch Bharat mission - SWM) 2018–2019–ம் ஆண்டு திட்டம் 8–வது மாநில உயர்மட்ட குழு கூட்ட அனுமதியின்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.1191/பி3/2019 நாள்.21.01.2019–ந் தேதிய நிர்வாக அனுமதியின் அடிப்படையில் இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடங்கில் ஏற்கனவே உள்ள 11350 Cum குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் பணிக்கு ரூ.75.00 இலட்சத்திற்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் இந்நகர் மன்ற தீர்மான எண்.508 நாள்.22.01.2019–ன்படி அனுமதி பெறப்பட்டு, விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறும் பொருட்டு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை தலைமை பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதில் கல்வி தலைவர் அண்ணா பல்கலைக்கழகம், திண்டுக்கல் அவர்கள் மூலம் வழங்கப்பட்ட கூர்ந்தாய்வு அறிக்கையின்படி (Change Point Survey) இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடஙகில் ஏற்கனவே உள்ள 9350 Cum குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் (Bio Mining Process) ரூ. 63.00 இலட்சத்திற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.18281/2018/DO1 நாள்.30.01.2019–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் பணிகளுக்கு 26.02.2019ம் தேதி மாநில அளவில் இவ்வலுவலக கடிதம் 1224/2018/இ1, நாள்.31.01.2019ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இந்நிலையில் மேற்படி பணிக்கு திண்டுக்கல் அண்ணா பல்கலைக் கழக கல்வித் தலைவரால் 18.01.2019ம் தேதி வழங்கப்பட்ட கூர்ந்தாய்வு அறிக்கையின்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டின் சரித்தன்மையை சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம் மூலம் மூன்றாம் நபர் அறிக்கையாக பெறுவதற்கு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இந்நகராட்சி பணிமேற்பார்வையாளரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன்படி, சென்னை அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம், இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண். 1224/2018/இ, நாள்.11.02.2019–ன்படி கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள 9350 Cu.m குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் (Bio Mining Process) ரூ.63.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள திண்டுக்கல் அண்ணா பல்கலைக் கழக கல்வித் தலைவரால் 18.01.2019ம் தேதி வழங்கப்பட்ட கூர்ந்தாய்வு அறிக்கையின்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டின் சரித்தன்மையை ஆய்வு செய்யும் பொருட்டு கட்டணம் ரூ. 1,77,000/—ஐ சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம், இயக்குநர் அவர்களுக்கு வங்கி கேட்பு வரைவோலை மூலமாக வழங்குமாறு சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம், இயக்குநர் அவர்களின் கடிதம் எண். CES/DIR/ Keelakarai Municipality/ 2018/19, நாள். 05.03.2019—ன்படியானது இந்நகராட்சிக்கு 14.03.2019—ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.1,77,000/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. தூய்மை இந்தியா திட்டம் — திடக்கழிவு மேலாண்மை (Swatch Bharat mission - SWM) 2018—2019—ம் ஆண்டு திட்டத்தில் மேற்காணும் பணிக்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யாததால், நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ஆய்வுக் கட்டணம் ரூ.1,77,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் ரூ.1,77,000/—ஐ ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பாராளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் நடைமுறையில் உள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.578அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :11</u>

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 புதுக்குடியில் அமைந்துள்ள கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் மூலம், அப்பகுதி பொதுமக்களால் தினமும் வெளியேற்றப்படும் வீட்டு கழிவு நீர் பம்பிங் செய்யப்பட்டு வெளியேற்றப்படுகிறது. மேற்காணும் கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் அமைந்துள்ள ஆயில் இன்ஜின் பம்ப் பழுதாகி உள்ளதால் மின்தடை ஏற்படும் நேரங்களில் ஆயில் இன்ஜின் பம்ப் இயக்க முடியாமல் கழிவு நீர் வாறுகாலில் இருந்து வெளியேறும் நிலை உள்ளது. மேற்காணும் இடத்தில் அமைந்துள்ள ஆயில் இன்ஜின் பம்ப் (5 HP Oil Engine Pump) பழுது நீக்கம் செய்து கொடுக்குமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்படி 5HP குதிரை திறன் கொண்ட ஆயில் இன்ஜின் பம்ப் இயங்காததால் கழிவுநீர் சாலையில் வெளியேறி பொதுசுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஆகவே, 5HP குதிரை திறன் கொண்ட ஆயில் இன்ஜின் பம்ப் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.22,000/—ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 429/2019/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. பொதுசுகாதார நலன் கருதி 5HP குதிரை திறன் கொண்ட ஆயில் இன்ஜின் பம்ப் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவினம் ரூ.22,000/—ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

<u>தீர்மானம் எண்.579 அனுமதிக்கப்பட்டது.</u>

ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.